பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

28 05 2026 THURSDAY 6 30 PM

வணக்கம்-மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- செயற்கை நுண்ணறிவு பாடத்திட்டத்தை மேம்படுத்த தொழில் நிறுவனங்கள் உதவ வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கேட்டுக் கொண்டுள்ளார்.

- பத்திரப் பதிவு நடைமுறை வெளிப்படைத்தன்மையோடு மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மாநில அமைச்சர் திரு. லோகேஷ் தமிழ்ச்செல்வன் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுக்க, த.வெ.க அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

- நீலகிரி, கோவை, திருச்சி உள்ளிட்ட 14 மாவட்டங்களில் அடுத்த இரண்டு நாட்களில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

- இந்தியா - இங்கிலாந்து இடையேயான முதலாவது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

>>>>><<<<<

செயற்கை நுண்ணறிவு பாடத்திட்டத்தை மேம்படுத்த தொழில் நிறுவனங்கள் உதவ வேண்டும் என்று மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கேட்டுக் கொண்டுள்ளார்

புதுதில்லியில், இதுதொடர்பான உயர்மட்ட ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர், கல்வி நிறுவனங்களும், தொழில் நிறுவனங்களும் இதற்காக ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

தற்போதைய பாடத் திட்டங்களில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை இணைக்க வேண்டும் என்று திரு. அஷ்வினி வைஷ்ணவ் வலியுறுத்தினார்.

>>>>><<<<<

தமிழக முதலமைச்சர் திரு. விஜய், தமது தில்லி பயணத்தை முடித்துக் கொண்டு இன்று மாலை சென்னை வந்து சேர்ந்தார்.

புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி, நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் ஆகியோரை அவர் சந்தித்துப் பேசினார்.

தமிழகத்தில் மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யுமாறு இரு தலைவர்களிடமும் அவர் கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

தமிழகத்தில் பத்திரப் பதிவு நடைமுறை வெளிப்படைத்தன்மையோடு மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக மாநில வணிகவரி மற்றும் பத்திரப் பதிவுத்துறை அமைச்சர் திரு. லோகேஷ் தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம், ராசிபுரத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பத்திரப்பதிவு அலுவலர்களில் தவறு செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்தார்.

தமிழகத்தில் வணிகர்கள் எந்தவித இடையூறுமின்றி வரிகளை செலுத்துவதை உறுதி செய்து வருவதாக கூறிய அவர், தொழில் செய்வதற்கான அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

வணிகர்களின் கோரிக்கையை ஏற்று, சரக்கு மற்றும் சேவை வரியை குறைக்க மத்திய அரசிடம் கோரிக்கை வைக்கப்படும் என்றும் திரு. லோகேஷ் தமிழ்ச்செல்வன் கூறினார்.

>>>>><<<<<

சென்னை அரும்பாக்கத்தில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சார்பில் கட்டப்பட்டு வரும் 304 அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் வணிக வளாக கட்டுமானப் பணிகளை மாநில அமைச்சர் திரு. ராஜ்குமார் இன்று நேரில் பார்வையிட்டார்.

கட்டுமானப் பணிகள் இறுதி கட்டத்தை எட்டியுள்ள நிலையில், பணிகளை விரைந்து முடித்து, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்குமாறு, அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரரை அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

மாநிலத்தில் பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் காலியாக உள்ள பணியிடங்களை விரைந்து நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. சண்முகம் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாநிலத்தில் உள்ள 21 பல்கலைக் கழகங்களில் 16ல் துணைவேந்தர் பணியிடங்கள் காலியாக உள்ளதாக கூறியுள்ளார்.

மேலும், 40 சதவீத பேராசிரியர், இணைப் பேராசிரியர் மற்றும் உதவிப் பேராசிரியர் பணியிடங்களும் நிரப்பப்படாமல் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உயர் கல்வியின் தரத்தை உறுதி செய்யும் பொருட்டு, விரைவாக பணியிடங்களை நிரப்ப மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு. சண்முகம் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்தில் சாதி வாரி மக்கள்தொகை கணக்கெடுப்பை உடனடியாக மாநில அரசு நடத்த வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கர்நாடகாவில் இரண்டாவது முறையாக நடத்தப்பட்ட சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு விவரங்கள் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழகத்திலும், சமூகநீதி சர்வே எனப்படும் இந்த கணக்கெடுப்பை உடனடியாக நடத்தி முடிக்க முதலமைச்சர் திரு. விஜய் உத்தரவிட வேண்டும் என்றும் திரு. அன்புமணி ராமதாஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுக்க, மாநிலத்தை ஆளும் த.வெ.க அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிஜேபி மூத்த தலைவர் திருமதி. தமிழிசை சௌந்தரராஜன் வலியுறுத்தியுள்ளார்.

திருவண்ணாமலையில் இன்று அண்ணாமலையார் திருக்கோவிலில் சாமி தரிசனம் செய்த பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அவர், த.வெ.க. அரசு பொறுப்பேற்ற 15 நாட்களில் பாலியல் பலாத்காரம் மற்றும் கொலைச் சம்பவங்கள் அதிக அளவில் நடைபெற்று வருவதாக குறை கூறினார்.

அரசு நிர்வாகத்தை சீரமைக்க வேண்டிய பொறுப்பு முதலமைச்சர் திரு. விஜய்-க்கு உள்ளதாக தெரிவித்த அவர், மத்திய மாநில அரசுகள் இணக்கமாக செயல்படும் சூழ்நிலையை உருவாக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

மக்கள் பிரச்சினையில் அக்கறை செலுத்தாமல், மாற்றுக்கட்சியினரை தங்கள் கட்சியில் இணைக்கும் நடவடிக்கையை த.வெ.க. மேற்கொண்டு வருவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

திருக்கோவில் நிர்வாகம் சீரமைக்கப்பட வேண்டும் என்று கூறிய திருமதி. தமிழிசை சௌந்தரராஜன், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை போர்க்கால அடிப்படையில் நிறைவேற்றித் தர வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

>>>>><<<<<

அஇஅதிமுக கட்சியின் வளர்ச்சிக்கு ஒற்றுமையாக இணைந்து பாடுபடப் போவதாக அக்கட்சியின் முன்னாள் அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி கூறியுள்ளார்.

கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தலைமையில், கட்சியை பாதுகாப்பது தங்களது கடமை என்றும் கூறினார்.

கடந்த சட்டப்பேரவை தேர்தலில் கட்சிக்கு ஏற்பட்ட தோல்வி குறித்து முழுமையாக ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அஇஅதிமுக குறித்து ஒரு சிலர் தவறான தகவல்களை பரப்பி வருவதாகவும் திரு. வேலுமணி குற்றம் சாட்டினார்.

>>>>><<<<<

பிரதமரின் முத்ரா யோஜ்னா திட்டத்தின் கீழ் தொழில் தொடங்குபவர்களுக்கு 10 லட்சம் ரூபாய் வரை மத்திய அரசு கடன் வழங்கி வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் கடன் பெற்றது தமக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்ததாக சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளிகள் தெரிவித்தனர்.

(Voice Byte – Beneficiary – 40 Sec)

>>>>><<<<<

நீலகிரி மாவட்டம், உதகை கோடை விழாவின் ஒரு பகுதியாக, படகு போட்டி இன்று நடைபெற்றது.

ஏராளமான சுற்றுலாப் பயணிகள் இப்போட்டியில் ஆர்வத்துடன் கலந்து கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சரவணன் 37 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

நீலகிரி, கோவை, திருச்சி உள்ளிட்ட 14 மாவட்டங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர்.துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - துரை 50 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம், ஆட்சியர் திருமதி. சினேகா தலைமையில் நாளை நடைபெறவுள்ளது.

>>>>><<<<<

திருவாரூர் மாவட்டம், திருக்காரவாசலில் உள்ள ஸ்ரீ கைலாச நாயகி - தியாகராஜ சுவாமி திருக்கோவிலில் வைகாசி விசாக தேரோட்ட விழா இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

இந்தியா - இங்கிலாந்து இடையேயான முதலாவது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி, இன்று நடைபெறுகிறது.

Chelmsford-ல் இப்போட்டி இரவு மணி 11 மணிக்கு தொடங்குகிறது.

>>>>><<<<<

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது மகளிர் ஹாக்கி போட்டியில் இந்தியா வெற்றிபெற்றது.

பெர்த்தில் நடைபெற்ற இப்போட்டியின் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில், இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்து சமநிலையில் இருந்தன.

இதனையடுத்து, சூட்அவுட் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதில் இந்தியா 4-1 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது.

>>>>>end<<<<<